# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.101/2022

### அ.சா.1 (LW 1 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திரு. ரமேஷ்** | **தொழில்** | |
| **த/க பெயர்** | சின்னக்கண்ணு | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **11.02.2026** |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>1 , 2 எதிரிகள் ஆஜர்.</u>**

நான் தற்போது கம்பிளியம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். டெய்லர் வேலை பார்க்கிறேன். ஆஜர் எதிரிகள் இருவரையும் தெரியும். 06.05.2021 அன்று புதுரோடு வள்ளுவர் நகர் என் மனைவியின் உறவினர் இறந்த பெரிய காரியத்திற்கு நான் என் குடுமபத்துடன் சென்றேன். அப்போது இறுதிச்சடங்கு முடிந்து இரவு 07.00 மணி அளவில் குடும்பத்தினருக்கு உணவு வாங்குவதற்கு SRK செட்டியார் ஓட்டலுக்கு உணவு வாங்க நானும் எனது மாமா பன்னீர் செல்வவமும சென்று இருந்தோம். அப்போது நாங்கள் இட்லி பார்சல் வாங்க காத்திருந்தோம். அப்போதுஅந்த கடைக்கு திடீரென்று இருவர் வந்தனர். அப்போது கடை நடத்தி வந்த சாந்தி என்பவரிடம் மேற்படி இருவர் நாங்கள் எல்லாம் கடையை சாத்திவிட்டோம், நீ என்ன கடையை சாத்தாமல் இருக்கிறாய் என கேட்டார்கள். நீ வியாபாரம் செய்கிறாயா இல்லையா என்று தேவிடியாதனம் பண்ணுகிறாயா என்று சொல்லி கடையில் இருந்த பொருட்களை அடித்து சேதம் செய்தனர். அப்போது என் உறவினரான பாலு கடைக்கு வந்து இட்லி வாங்கி விட்டீர்கள என கேட்டார். அப்போது அங்கிருந்த இருவர் நாங்கள் கடையை சாத்த சொல்கிறோம் அந்த தேவடியாவுக்கு சப்போர்ட் செய்கிறீர்களா என கேட்டார்கள். அப்போது பாலு அவர்களிடம் ஏன் சத்தம் போடுகிறீர்கள் நாங்கள் இட்லி வாங்கி விட்டு செல்கிறோம் என சொன்னார். அப்போது நான் அந்த கடையிலிருந்த சாந்தி என்பவரிடம் மேற்படி இரு நபர்களை பற்றி கேட்ட போது எதிரில் ஓட்டல் நடத்தி வரக்கூடிய துரைராஜ், கார்த்தி என கூறினார்கள். அப்போது அவர்கள் இருவரும் மேலும் தகாத வார்த்தைகளை பேசி வந்தார்கள். அப்போது எனது மாமா பன்னீர் செல்வம் நாங்கள் இட்லியை வாங்கி விட்டு போய்விடுகிறோம், ஏன் தகாத வார்த்தை பேசுகிறீர்கள் என சொன்னார். அப்போது துரைராஜ் நான் கடையை அடைக்க சொல்கிறேன் நீ அந்த தேவடியாவுக்கு சப்போர்ட் செய்கிறாய் என்று கூறி என் மாமா பன்னீர்செல்வத்தை குரல்வளையை பிடித்து சுவற்றில் மோதி காயப்படுத்தினார். அதனால் என் மாமாவுக்கு பின் தலையில் காயம் ஏற்பட்டு மூக்கு, வாய் வழியாக இரத்தம் வந்தது. அப்போது நான் ஓடிப்போய் என் மாமா பன்னீர் செல்வத்தை பிடிக்கச் சென்றேன். எதிரி கார்த்தி என்னை பிடித்து பின் முதுகில் அடித்து கீழே தள்ளிவிட்டு என்னை காயப்படுத்தினார்.

அதில் எனது இடது கால் முழங்காலில் காயம் ஏற்பட்டது. வலது காலிலும் காயம் பட்டது. அப்போது கடையிலிருந்த 3 பெண்கள் ஓடி வந்து மேற்படி இரண்டு நபர்களையும் கார்த்திக், துரைராஜ் ஆகியோர்களை தடுத்து சத்தம் போட்டனர், அவர்களுடன் பாலு என்பவரும் சத்தம்போட்டார். அதன்பின்பு எதிரிகள் அங்கிருந்து ஓடிவிட்டனர். அதன்பின்னர் பாலு பூபதி என்பவருக்கு போனில் தகவல் கொடுத்தார். உடனே சம்பவ இடத்திற்கு பூபதி, ராஜ்குமா**அ.த.சா.ஆ.1. ஆகும்.** ர், தங்கராஜ் ஆகியோர்கள் வந்தார்கள். உடனே அவர்கள் வாகனத்தை வரவழைத்து காயம்பட்ட பன்னீர் செல்வத்தை திண்டுக்கல் அரசுமருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அப்போது திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் என்ககு சிகிச்சை அளித்தனர். எனது மாமா பன்னீர் செல்வத்தை பார்த்து விட்டு மேல்சிகிச்சைக்காக மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்ல அறிவுறுத்தினார்கள். அப்போது நான் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் நான் சிகிச்சையிலிருந்தேன். அதன்பின்னர் 2 நாட்கள் கழித்து 8.5.2021 அன்று எனது மாமா பன்னீர் செல்வம் இறந்து விட்டதாக சொன்னார்கள். சிகிச்சை முடிந்து எனது மாமா பன்னீர் செல்வத்தின் இறுதி சடங்கிற்கு சென்றேன். நான் சிகிச்சையிலிருந்த போது திண்டுக்கல் எரியோடு போலிசார் என்னிடம் மேற்படி வழக்கு சம்மந்தமாக வாக்குமூலமாக கொடுத்தேன். போலிசார் அதை வாக்குமூலமாக பதிவு செய்து கொண்டார்கள். நான் மேற்படி புகாரை படித்துப் பார்த்து கையெழுத்து போட்டேன். என் மனைவி சாட்சி கையெழுத்து போட்டார். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் **அ.த.சா.ஆ.1. ஆகும்.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

சம்பவம் நடந்த இடம் எந்த கிராமத்தை சேர்ந்தது என எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த கடை மேற்கு பக்கம் பார்த்து இருந்தது. மேற்படி கடைக்கு முன்பு ஆஸ்பெஸ்ட்டாஸ் போட்ட ஒரு தாழ்வாரம் உள்ளது. அதற்கு முன்பாக தென்னங்கீற்று போட்ட ஒரு பந்தல் உள்ளது. கடைக்கும், ஆஸ்பெஸ்ட்டாஸ் போட்ட பகுதியில் இடையே கிரில் பகுதி போட்டு அடைத்து வைக்கப்பட்டிருந்ததா என்றால் இல்லை. சம்பவம் நடந்த இடத்தில் எந்தெந்த பகுதியில் கிழக்கு மற்றும் மேற்கு பக்கத்தில் சுவர் இருந்தது. தெற்கு, வடக்கு பக்கத்தில் சுவர் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் சுவர் இல்லை என்றால் சரியல்ல. சம்பவம் ஆஸ்பெஸ்ட்டாஸ் போட்ட பகுதியில் நடந்ததா என்றால் இல்லை. என் ஊர் நத்தம் தாலுகா, கம்பிளியம்பட்டி ஆகும். என் ஊருக்கும், சம்பவ நடந்த ஊருக்கும் சுமார்50 கிமீ தூரம் இருக்கும். இறந்து போன பன்னீர்செல்வத்தின் ஊர் திருச்சி மாவட்டம், மணப்பாறை அருகில் உள்ள வையம்பட்டிஆகும். மேற்படி பன்னீர்செல்வத்திற்கு ஊருக்கும் சம்பவ இடத்திற்கும் சுமார் 50 கீமீ தூரம் இருக்கும். எதிரிகள் எந்த ஊரை சேர்ந்தவர்கள் என்றால் தெரியாது. ஏனென்றால் நான் ஊருக்கு புதிது. புங்கம்பாடி பிரிவில் கடை நடத்தி வந்த விவரம் மட்டும் தெரியும். சம்பவம் நடந்த கடைக்கு எதிரில் ஆஜர் எதிரிகளின் கடை உள்ளது. நான் சொல்வது போல் எதிரிகள் கடை அங்கு இல்லை என்றால் சரியல்ல. சம்பவத்திற்கு முன்னால் எதிரிகளை தெரியாது. சம்பவதத்திற்கு

பிறகு எதிரிகளை நீதிமன்றத்தில்தான் பார்க்கிறேன் என்றால் சரிதான். சம்பவம் இரவு 07.00 மணிக்கு நடந்தது. சம்பவம் நடந்த பிற கு போலிசார் என்னை ஜெயிலுக்கு கூட்டிச் சென்று அடையாள அணிவகுப்பு நடத்தி எதிரிகளை காட்டினார்களா என்றால் இல்லை. இறந்து போன பன்னீர்செல்வத்திற்கு சம்பவத்திற்கு முன்பு எதிரிகளை தெரியாது என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்பு எதிரிகளுக்கும், எனக்கும், பன்னீர்செல்வத்திற்கும் எந்த முன்விரோதமும் கிடையாது. நான் சொல்லும் சம்பவம் எதிர்பாரா விதமாக திடீரென நடந்தது என்றால் சரிதான். நான் கொடுத்த புகார் வாக்குமூலத்திலும், 161 வாக்குமூலத்திலும் எதிரிகளுக்கும் எங்களுக்கும் தள்ளுமுள்ளு நடந்ததாக சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். அந்த தள்ளுமுள்ளில் நானும், பன்னீர்செல்வமும் கீழே விழுந்தோம் என்றால் சரிதான். பன்னீர் செல்வத்திற்கு பின் மண்டையில் கழுத்திற்கு மேல் புடனியில் காயம்பட்டது என்றால் சரிதான். பன்னீர் செல்வம் சுவற்றில் அடித்ததில் 2 ஸ்டெப் தள்ளி கீழே விழுந்து விட்டார். சம்பவத்தில் எனக்கு முழங்காலில் காயம் ஏற்பட்டது. அந்த காயத்தை நான் மருத்துவரிடம் காட்டினேன். காயம் எப்படி ஏற்பட்டது என சொன்னேன். என்னை அடையாளம் தெரியாத நபர்கள் தாக்கியதாக மருத்துவரிடம் சொல்லியிருந்தேன் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரிலும், மறு வாக்குமூலத்திலும் முழங்காலில் காயம் ஏற்பட்டதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் சம்பவ இடத்திற்கு இட்லி வாங்க சென்ற பிறகு பாலன் 20 நிமிடம் கழித்து வந்தார். பாலன் அவரின் வீட்டிலிருந்து வந்தார். அவரின் வீடு வள்ளுவர் நகரில் உள்ளது. நானும் பன்னீர் செல்வமும் பெரிய காரியத்திற்கு வந்திருந்த போது மது அருந்தியிருந்தோம் என்றால் சரியல்ல. மதுபோதையில் பன்னீர்செல்வம் தவறி விழுந்ததில் மண்டையில் அடிபட்டது என்றால் சரியல்ல. நானும் போதையில் கீழே விழுத்தில் காயம்பட்டது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த போது கடைக்காரர் சாந்தியிடம் நான் எதிரிகள் பெயரை கேட்டதற்கு அவர் துரைராஜ், கார்த்திக் என சொன்னது பொய் என்றால் சரியல்ல. என்னையும், பன்னீர்செல்வத்தையும் தாக்கியதற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் என்னையோ, பன்னீர்செல்வத்தையோ தாக்கவில்லை என்றால் சரியல்ல. திண்டுக்கல் அரசு மருத்துவமனை சம்பவ இடத்திலிருலுந்து 40 கீமீ தூரம் இருக்குமா என்றால் சரியாக தெரியாது. சம்பவ இடத்திலிருந்து திண்டுக்கல் அரசு மருத்துவமனை வரவேண்டும் என்றால் எரியோடு தாண்டி வரவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு வரும் வழியில் எரியோடு காவல்நிலையத்தில் புகார் அளிக்க முயற்சித்தோமா என்றால் இல்லை. சம்பவ இடத்திலிருந்து திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு என்னுடன் சேர்த்து, பன்னீர்செல்வம், பூபதிராஜ், ராஜ்குமார், தங்கராஜ் ஆகியோர் காரில் வந்தோம். எங்களில் யாரும் இறங்கி புகார் கொடுக்க முயற்சித்தோமா என்றால் இல்லை. பன்னீர்செல்வம் சீரியசாக இருந்ததால் இறங்கவில்லை. சம்பவத்தின் போது பாலன் எதிரிகளை தாக்க

முயற்சித்தாரா என்றால் இல்லை. நானும், பன்னீர் செல்வமும் எதிரிகளை தாக்க முயற்சிக்கவில்லை. புகாரிலும், வாக்குமூலத்திலும் 2 வது எதிரி என்னை முதுகில் அடித்தார் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.02.11 19:03:12 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.